இணைப்பு-I

[........2 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 81-க்கான விடையைக் காண்க]

அவைமுன் வைக்கப்படும் அறிக்கை.

(அ) ஆம்

(ஆ) கீழ்க்காணும் நடைமுறைகளுக்குட்பட்டு நிலவள வங்கிகள் மூலம் முன் கடன்கள் தீர்க்க கடன்கள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது;

(i) மாநில நிலவள வங்கி ஒராண்டில் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் 10 சதவீதத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும்,

(ii) ஒற்றியின் பேரில் வாங்கப்பட்ட கடன்கள், அடைமானம் வைத்துப் பெற்ற கடன்கள், மற்றும் டிகிரி கொடுக்கப் பட்ட கடன்கள் ஆகிய முன் கடன்களைத் தீர்க்க கடன் வழங்கப் படுகிறது.

(iii) முன் கடன்கள் தீர்க்க மட்டுமே வழங்கப்படும் கடன்கள் உறுப்பினர் ஒருவருக்கு ரூ. 5,000-க்கு அதிகப்படக் கூடாது.

(iv) அரசு கடன் மற்றும் ஒற்றியின் பேரில் வாங்கப்பட்ட கடன் தவிர, பிற முன் கடன் கணக்கை தீர்க்க மட்டும் கடன் பெற வேண்டுமானால், மேற்குறிப்பிட்ட கடன்கள் அவைகளைத் தீர்க்க கோரப்படும் கடன் மனுவின் தேதியிலிருந்து குறைந்த அளவு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்டிருக்க வேண்டும். இக்கால அளவு, முன் கடன்களைத் தீர்ப்பதோடு, மற்ற காரணங்களுக்கும் சேர்த்து கோரப்படும் கடன்களுக்குப் பொருந்தாது.

(இ) இல்லை.

இணைப்பு II

[....13ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 85-க்கான விடையைக் காண்க.]

(அ) கடல் மீனளத்தை மேம்படுத்துவதற்காக இழுபடகுகளை (Trawlers) இறக்குமதி செய்ய 1973 ஆம் ஆண்டில் மத்திய அரசு அறிவித்த திட்டத்தின் கீழ் மாநில மீன் வளர்ச்சிக் கழகம், மெக்சிகோவில் ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து இரு இழு படகுகளைக் காலம் தாழ்த்தித் தொகை கொடுக்கும்படி அடிப் படையில் வாங்கியுள்ளது.

[1980 பிப்ரவரி 7

(ஆ) மீன் வளர்ச்சிக் கழகம், மெக்சிகோவில் 30-8-1977 அன்று இரு இழு படகுகளையும் தன் வசம் பெற்றுக் கொண்டது. இப்படகுகள் 7-3-1978 அன்று சென்னை வந்து சேர்ந்தன. இவ்விரு இழு படகுகளுக்கும் ஈட்டுறுதி போக்குவரத்துச் செலவுஉட்பட மொத்த செலவு ஏறத்தாழ 80 இலட்ச ரூபாயாகும். வெளிநாட்டு நிறுவனத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி, விலையில் 20 சதவீதம் தொகை ஒப்பந்தம் கையெழுத்திடும் போது கொடுக்கப்பட்டது. எஞ்சியுள்ள 80 சதவீதத்தை, 13 அரையாண்டுத் தவணைகளில் கொடுக்க வேண்டும். இழு படகுகளைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து 12 மாதங்கள் கழித்து 7சதவீதம் வட்டியுடன் கொடுக்கப்பட வேண்டும். மெக்சிகன்கப்பல் கட்டும் தளத்திற்கு உடனடியாக கொடுக்கப்படும் 20 சதவீதம் ரொக்கத் தொகைக்கும் காலம் தாழ்த்திக் கொடுக்கப்படும் 80 சதவீதம் தொகைக்கும் 90 சதவீதம் வரை கடன் வழங்கிய மத்திய அரசு, கப்பல்போக்குவரத்து மேம்பாட்டு நிதிக்குழுவிடம் (Shipping Development Fund Committee) ஏற்பாடு செய்துள்ளது. உடனடியாக கொடுக்கப்படும், 20 சதவீதம் ரொக்கத் தொகைக்கும் பிற செலவுகளுக்காகவும் தொடக்கத்தில், 29.90 இலட்சம் ரூபாயை வழங்கக் கப்பல் போக்கு வரத்து மேம்பாட்டு நிதிக்குழு ஒப்புக்கொண்டுள்ளது.

இணைப்பு III

[......14ம் பக்கத்திலுள்ள உடுகுறியிடாத வினா எண் 86-க்கான விடையைக் காண்க]

(அ) 1979-ம் ஆண்டில், மீனவர்களுக்கு விசைப்படகுகள் வழங்க தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது.

(ஆ) அத்திட்டத்தின்படி—

(1) மீனவர்களுக்கு 1,600 மீன் பிடி விசைப்படகுகள் வழங்கப்படும் (93 மீனவர்களுக்கு 30 அடி அளவுள்ள படகுகளும், 67 மீனவர்களுக்கு 32 அடி அளவுள்ள படகுகளும் வழங்கப்படும்).

(2) படகின் மொத்த விற்பனை விலையில், 10 சதவீதத் தொகையை அரசு மானியமாக வழங்கும்.

(3) எஞ்சிய 90 சதவீத தொகையில், 5 சதவீதத்தை மீனவர்கள் ரொக்கமாக செலுத்த வேண்டும் 15 சதவீதத்தை அரசு கடனாக வழங்கும். மீதி 80 சதவீதத்தை வங்கிகள் கடனாக வழங்கும்.